<u>2025 ஆகஸ்ட் மாதம் 03 – ஆம் தேதி புதன்கிழமை</u>

<u>கூடுதல் மாவட்ட விரைவு நீதிமன்றம், தேனி</u>

<u>எம் .சி .ஓ .பி. நெம்பர் : 57/2020</u>

2025–ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 03 – ஆம் தேதி புதன்கிழமை

2ம் எதிர்மனுதாரர் தரப்பு சாட்சியாகிய RW2 நபரின் வாக்கு மூலம்

<u>(1969–ஆம் ஆண்டின் 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி)</u> திருமதி.ட.சுபத்ரா, கிரேடு I பெஞ்ச் கிளர்க் அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர்: | RW2 – திருக்குமரன் |
| தந்தை பெயர்: | பெருமாள் |
| ஊர்: | பெருமாள்கவுண்டன்பட்டி |
| வட்டம்: | போடிநாயக்கனூர் |
| மாவட்டம்: | தேனி |
| தொழில்: | ஓட்டுநர் |
| வயது : | 43 |

<u>தேதி : 03.09.2025.</u>
<u>முதல் விசாரணை: –</u>

நான் இந்த மனுவில் 2ம் எதிர்மனுதாரர் தரப்பு கூடுதல் சாட்சியாவேன். எனது தரப்பில் ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை. நான் கடந்த 11.05.2020ம் தேதி TN 60 AW 1503 என்ற பதிவு எண் கொண்ட டிப்பர் லாரியை ஓட்டிச்சென்றேன் என்றால் சரிதான். உத்தமபாளையம் – அம்மாப்பட்டி என்ற பிரதானசாலையில் TN 60 AW 6126 என்ற பதிவு எண் கொண்ட இருச்சக்கர வாகனம் மோதி விபத்து ஏற்பட்டது என்றால் சரிதான். விபத்து யாருடைய கவனக்குறைவால் ஏற்பட்டது என்றால் இருச்சக்கர வாகனம் ஓட்டிவந்த நபரின் கவனக்குறைவால் தான் ஏற்பட்டது. விபத்து சமயத்தில் லாரியை நான் எவ்வாறு ஓட்டிவந்தேன் என்றால் நான் வாகனத்தை ஓட்டவே இல்லை, நின்றுக்கொண்டிருந்த என்னுடைய வாகனத்தின் மீது தான் மோதி விபத்து

ஏற்பட்டது. விபத்து சமயத்தில் இருச்சக்கர வாகனத்தை ஓட்டிவந்த நபர் தலைகவசம் அணியவில்லை.

**<u>மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

விபத்து சம்பந்தமாக என்மீது தான் உத்தமபாளையம் காவல் நிலையத்தில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். குற்ற இறுதி அறிக்கையும் என்மீது தான் தாக்கல் செய்யப்பட்டு, வழக்கானது உத்தமபாளையம் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் நடைபெற்று வருகிறது என்றால் சரிதான். மேற்படி வழக்கானது தற்போது வரை நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். விபத்து சமயத்தல் எனக்கு செல்லத்தகுந்த உரிய ஓட்டுநர் உரிமம் இருந்தது என்றால் சரிதான். நான் ஓட்டிய லாரிக்கும் காப்பீடு செல்லத்தகுந்த நிலையில் தான் இருந்தது. விபத்து சமயத்தில் நான் தெற்கிலிருந்து வடக்கு நோக்கி செல்லும்போது அம்மாபட்டி புதுக்காலனி எதிர்திசையில் தெற்குப்பக்கம் கார் ஒன்று வந்தது என்றும், நான் தீடீரென பிரேக் போட்டு வண்டியை நிறுத்தினேன் என்றும், அதனால் எனக்கு பின்னால் இருச்சக்கர வாகனத்தை ஓட்டிவந்த சுருளிராஜ் என்பவர் லாரியின் மீது மோதி விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல, நான் வண்டியை ஓட்டவே இல்லை, போலீசாரிடம் வாகனத்திற்குரிய ஆவணங்களை காட்டியப்போது, பின்னால் சத்தம்கேட்டு நானும், போலீசாரும் போய் பார்த்தப்போது, விபத்து ஏற்பட்டது. நான் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றும், என்னுடைய கவனக்குறைவால் தான் விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் இன்று 03.09.2025 அன்று வியாழக்கிழமை சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

SANKAR Digitally signed by SANKAR Date: 2025.09.03 18:52:53 +0530

கூடுதல் மாவட்ட நீதிபதி (FAC). தேனி.
03.09.2025